டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.04.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 246 - Madurai | Online Edition

# மேற்கு ஆசியாவில் நிலவும் சூழல் மற்றும் அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அண்மைத் தகவல்கள்

புது தில்லி, ஏப்.13

மேற்கு ஆசியாவில் பதற்றம் நிலவும் சூழலில் முக்கியத் துறைகள் முழுவதும் தயார்நிலையையும், தடையற்ற செயல்பாட்டையும் உறுதி செய்வதற்காக மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது.

மேற்கு ஆசியாவில் உருவாகி வரும் சூழ்நிலையின் பின்னணியில், எரிசக்தி விநியோகம், கடல்சார் நடவடிக்கைகள், அப்பகுதியில் உள்ள இந்திய மக்களுக்கான ஆதரவு ஆகியவை தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த அண்மைத் தகவல்கள் :

நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள், எல்பிஜி தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பொதுமக்கள் பெட்ரோல் மற்றும் டீசலை பீதியுடன் வாங்குவதையும், எல்பிஜியைத் தேவையில்லாமல் முன்பதிவு செய்வதையும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மக்கள் வதந்திகளை நம்பாமல், சரியான தகவல்களுக்கு அதிகாரப் பூர்வமான தகவல்களை மட்டுமே சார்ந்திருக்குமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள்.

எல்பிஜி சிலிண்டர்களை முன்பதிவு செய்வதற்கு, பொதுமக்கள் டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்துமாறும், அவசியமின்றி எல்பிஜி

## அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

### விடுமுறை அறிவிப்பு

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு
14.04.26 செவ்வாய்க்கிழமை விடுமுறை.
எனவே எமது அடுத்த மின்னிதழ் 16.04.25 வியாழக்கிழமை வெளிவரும். - நிர்வாகி

விநியோகஸ்தர்களை நேரில் சந்திப்பதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இயன்ற இடங்களில் எல்லாம் பிஎன்ஜி, இன்டக்ஷன், மின்சார அடுப்புகள் போன்ற மாற்று எரி பொருட்களைப் பயன்படுத்துமாறு மக்கள் ஊக்குவிக்கப்படு கிறார்கள். எல்பிஜி தேவையின் மீதான அழுத்தத்தைக் குறைப்ப தற்காக, மண்ணெண்ணெய், நிலக்கரி போன்ற மாற்று எரிபொருள் தேர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறு, நடுத்தர, இதர நுகர்வோருக்கு நிலக்கரியை விநியோகிப்பதற்காக, மாநிலங்களுக்கு அதிக அளவில் நிலக்கரியை ஒதுக்கீடு செய்யுமாறு கோல் இந்தியா மற்றும் சிங்கரேனி நிலக்கரி நிறுவனங்களுக்கு நிலக்கரி அமைச்சகம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. வீட்டு உபயோகம் மற்றும் வணிக நுகர்வோர் இருவருக்கும் புதிய பிஎன்ஜி இணைப்புகளை எளிதாக்குமாறு மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோக நிலவரத்தை ஆய்வு செய்வதற்காக, அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் மற்றும் முதன்மைச் செயலாளர் களுடன் (உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல்) பெட்ரோலிய அமைச்சகத்தின் செயலாளர் ஒரு கூட்டத்தை அண்மையில் நடத்தினார். போதுமான அளவு எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

பதுக்கல் திசைதிருப்பல், தவறான தகவல்களுக்கு எதிராகக் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளும் அதே வேளையில் குறிப்பாக வீட்டு உபயோக மற்றும் அத்தியாவசியத் தேவை களுக்காக எல்பிஜி விநியோகத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எல்பிஜி பதுக்கல், கள்ளச்சந்தையைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் அமலாக்க நடவடிக்கைகள் தொடர்கின்றன. நேற்று (11.04.2026), நாடு முழுவதும் 2700-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டன. 11.04.2026ல் 52.3 லட்சத்திற்கும் அதிகமான வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் திடீர் ஆய்வுகளைத் தீவிரப்படுத்தி, 11.04.2026 வரை 219 எல்பிஜி விநியோக நிறுவனங்களுக்கு அபராதம் விதித்துள்ளன. 56 விநியோக நிறுவனங்களை இடைநீக்கம் செய்துள்ளன. இணைய தள எல்பிஜி முன்பதிவுகள் சுமார் 98% அதிகரித்துள்ளன.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

திசை திருப்பப்படுவதைத் தடுப்பதற்காக, விநியோக அங்கீகாரக் குறியீட்டு (DAC) அடிப்படையிலான விநியோகங்கள் 93 % ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. மொத்த வர்த்தக எல்பிஜி ஒதுக்கீடு நெருக்கடிக்கு முந்தைய அளவுகளில் சுமார் 70% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 8 நாட்களில் பொதுத்துறை எண்ணெய் சந்தைப் படுத்தல் நிறுவனங்கள், 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் தொடர்பாக சுமார் 3300 விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்து உள்ளன. அவற்றில் 35,800-க்கும் மேற்பட்ட 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. பிப்ரவரி மாதத்தில் தினசரி சராசரியாக 77,000 ஆக இருந்த நிலையில், 10.04.26 அன்று நாடு முழுவதும் சுமார் 1 லட்சத்து 5 ஆயிரம் எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஐஓசிஎல், ஹெச்பிசிஎல் மற்றும் பிபிசிஎல் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்களைக் கொண்ட மூன்று பேர் கொண்ட குழு, வணிக ரீதியான எல்பிஜி விநியோகத்தைத் திட்டமிடுவதற்காக மாநில அதிகார அமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. 14 மார்ச் 2026 முதல் சுமார் 1,20,898 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி (63.6 லட்சத்திற்கும் மேற்பட்ட 19 கிலோ எல்பிஜி சிலிண்டர் களுக்குச் சமம்) விற்பனை செய்யப்பட்டுள்ளது. 11.04.2026 வரை 7665 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி ( சுமார் 4 லட்சம் 19 கிலோ எல்பிஜி சிலிண்டர்களுக்குச் சமம்) விற்பனை செய்யப்பட்டது.

உர ஆலைகளுக்கான ஒட்டுமொத்த எரிவாயு ஒதுக்கீடு, அவற்றின் ஆறு மாத சராசரி நுகர்வில் ஏறத்தாழ 95 சதவீதத்தை எட்டும் வகையில், 09.04.26 முதல் மேலும் 5% அதிகரிக்கப்பட்டுள்ளது. வணிக ரீதியான எல்பிஜி கிடைப்பது குறித்த கவலைகளைத் தீர்க்கும் வகையில், ஹோட்டல்கள், உணவ கங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற வணிக நிறுவனங்களுக்கு பிஎன்ஜி இணைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு நகர எரிவாயு விநியோக (சிஜிடி) அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஐஜிஎல், எம்ஜிஎல், கெயில் கேஸ், பிபிசிஎல் உள்ளிட்ட சிஜிடி நிறுவனங்கள், வீட்டு உபயோக, வணிக பிஎன்ஜி இணைப்புகளுக்கு ஊக்கத்தொகைகளை வழங்குகின்றன. சிஜிடி கட்டமைப்புகளின் விரிவாக்கத்திற்குத் தேவையான ஒப்புதல்களை விரைவுபடுத்துமாறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய அமைச்சகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாகக் கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

*நேற்றைய தொடர்ச்சி...*

### 3. உலர் பழ லட்டு (Dry Fruit Laddu)

**தேவையான பொருட்கள்**

பேரீச்சம் பழம் – 1 கப் (கொட்டை நீக்கியது)

அத்திப்பழம் – 1/2 கப்

முந்திரி – 1/4 கப்

பாதாம் – 1/4 கப்

பிஸ்தா – 1/4 கப்

தேங்காய் துருவல் – 2 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)

ஏலக்காய் தூள் – 1/4 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)

**செய்முறை விளக்கம்**

1. பேரீச்சம் பழம் மற்றும் அத்திப்பழத்தை மிக்ஸியில் போட்டு சற்று கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

2. முந்திரி, பாதாம், பிஸ்தா ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொ ள்ளவும்.

3. ஒரு பாத்திரத்தில் அரைத்த பழ கலவை, நறுக்கிய நட்ஸ், தேங்காய் துருவல் மற்றும் ஏலக்காய் தூள் சேர்த்து நன்கு கலக்கவும்.

4. இந்தக் கலவையை சிறு சிறு லட்டுகளாகப் பிடித்து பரிமாறவும்.

### 4. பழ ஸ்மூத்தி (Fruit Smoothie)

**தேவையான பொருட்கள்**

வாழைப்பழம் – 1

மாம்பழம் – 1/2 கப் (நறுக்கியது)
பால் அல்லது பாதாம் பா ல் – 1 கப்
தேன் – 1 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)
ஐஸ் கட்டிகள் – சில (விருப்பத்திற்கேற்ப)

**செய்முறை விளக்கம்**

1. அனைத்து பொருட்களையும் மிக்ஸி ஜாரில் சேர்க்கவும்.
2. மென்மையாகும் வரை நன்கு அரைக்கவும்.
3. உடனடியாகப் பரிமாறவும்.

### 5. பழ பர்கர் (Fruit Burger)

**தேவையான பொ ருட்கள்**

ஆப்பிள் துண்டுகள் – 2 (பர்கர் பன் வடிவில் வட்டமாக நறுக்கியது)
வாழைப்பழம் – 1 (வட்டமாக நறுக்கியது)
ஸ்ட்ராபெர்ரி – சில (நறுக்கியது)
பன்னீர் அல்லது சீஸ் துண்டுகள் – சில (விருப்பத்திற்கேற்ப)
தேன் அல்லது சாக்லேட் சிரப் – அலங்கரிக்க

**செய்முறை விளக்கம்**

1. ஒரு ஆப்பிள் துண்டின் மீது பன்னீர் அல்லது சீஸ் துண்டுகளை வைக்கவும்.
2. அதன் மேல் வாழைப்பழம் மற்றும் ஸ்ட்ரா பெர்ரி துண்டுகளை அடுக்கவும்.
3. மற்றொரு ஆப்பிள் துண்டால் மூடி, தேன் அல்லது சாக்லேட் சிரப் கொண்டு அலங்கரித்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# இப்கோவின் தேசிய அளவிலான நானோ உரங்களின் விழிப்புணர்வு பிரச்சாரம்




சென்னை, ஏப்.13 இப்கோவின் தலைவர், திலீப் சங்காணி மற்றும் நிர்வாக இயக்குனர், கே.ஜே.பட்டேல், நாட்டில் நானோ உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில், மாபெரும் விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி வைத்தனர்.

இந்தியா முழுவதும் 19 மாநிலங்களிலுள்ள, 560 மாவட்டங்கள் மற்றும் 3,477 தாலுக்காக்களில் இந்த பிரச்சாரமானது,10 நாட்கள் நடைபெற உள்ளது. இப்பிரச்சாரம் மூலம் விவசாயிகளுக்கு நானோ யூரியா, நானோ டிஏபி, நானோ காப்பர் மற்றும் நானோ ஜிங்க் உரங்களைப் பயன் படுத்தும் முறைகள் மற்றும் நன்மைகள் குறித்து விளக்கப்படும். நாடு முழுவதும் நானோ உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க இந்த திட்டம் முக்கிய பங்கு வகிக்கும்.

மேலும், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் இப்கோ அலுவலர்கள் மூலம், விவசாயிகள் நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில் செயல்முறை விளக்கங்கள், கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

இத்திட்டமானது, விவசாயிகளின் செலவை குறைத்து, விளைச்சலை அதிகரித்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க உதவும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், இப்கோவின் புதிய தயாரிப்புகளான, நானோ NPK திரவ உரம் (8-8-10) மற்றும் நானோ NPK குருணை உரங்கள் (20-10-10) ஆகியவை இந்தியாவின் உர கட்டுப்பாட்டு ஆணையில் (FCO) அதிகாரப்பூர்வமாக சேர்க்கப்பட்டுள்ளன.

# சாத்தனூர் அணை நீர்மட்டம் சரிவு

திருவண்ணாமலை, ஏப்.13

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சாத்தனூர் அணை 119 அடி உயரம் கொண்டது. சமீபத்திய மழையால் அணை முழு கொள்ளளவு எட்டியதால் பாசனத்திற்காக தண்ணீர் திறக்க வேண்டும் என திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதனை ஏற்று வினாடிக்கு 550 க.அடி தண்ணீர் வெளியேற்றப் பட்டு வருவதால் நீர்மட்டம் 92.50 அடியாக குறைந்துள்ளது.



# கோடை உழவின் பயன்கள் மற்றும் அறிவியல் பூர்வமான விளக்கங்கள்

திருவள்ளூர், ஏப்.13

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு கோடை உழவின் பயன்கள் மற்றும் அறிவியல் பூர்வமான விளக்கங்களை நமது விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர், பி.டி.இராஜேஷ் கூறியதாவது,

கோடை பருவத்தில் செய்யப்படும் கோடை உழவு என்பது ஒரு பாரம்பரிய நடைமுறையாக இருந்தாலும், இது நிலத்தின் பௌதீக, இரசாயன மற்றும் உயிரியல் பண்புகளை மேம்படுத்தி அதிக மகசூல் பெற வழிவகை செய்கிறது.

**கோடை உழவின் பொதுவான நன்மைகள்**

1. ஆழ அகல உழுவதின் மூலம் மண் கட்டிகள் சிதைந்து மண் பொடியாகிறது. இதனால் நிலத்திற்குள் நல்ல காற்றோட்டம், நீர் ஊடுருவல் மற்றும் வேர் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

2. நிலத்தினுள் உள்ள பூச்சி முட்டைகள், லார்வாக்கள், பூஞ்சை, பாக்டீரியாக்கள் போன்ற தீமை பயக்க கூடிய காரணிகள் அழிந்துவிட வழி வகை செய்கிறது.

3. மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் செயல்பாடுகள் அதிகரிக்கப்படுகிறது.

4. தாது உப்புக்கள் தாவரங்களுக்கு எளிதில் கிடைத்திட உதவியாக உள்ளது.

5. மழை நீர் நிலத்தினுள் எளிதில் ஊடுருவி செல்லும்.



வயலில் 15-30 செ.மீ வரையிலான குறுக்கு நெருக்கு உழவுகள் மால்ட் போர்டு ப்ளவ் (அல்லது) டிஸ்க் ப்ளவ் மூலம் செய்ய வேண்டும். கோடை உழவு செய்த நிலங்களில் 15-20% மகசூல் அதிகரிப்பதாகவும் மற்றும் மண் ஈரப்பதம் 20 -30% வரை அதிகரிப்பதாகவும் ஆராய்ச்சிகள் மூலம் நிருபனமாகி உள்ளது.

கோடை உழவு மூலம் குறைந்த செலவில் அதிக நன்மைகள் பெற்று விவசாயிகள் பயன்பெற முடியும். மேலும், நமது விவசாயத்திற்கு ஆதாரமான மண் வளத்தையும் பெருக்க முடியும். இத்தகைய நன்மைகள் உள்ள “கோடை உழவு” மூலம் நமது பகுதி விவசாயிகள் மண் வளம் பெருக்கி, சிறப்பான விவசாயம் செய்திட வேளாண் அலுவலர் அறிவுருத்துகிறார்.

மேலும், தரமான விதைகள் பயன்படுத்துவதன் மூலம் விவசாய இடுபொருள் செலவீனங்களை தவிர்க்கலாம். விதைகள் தரத்தினை அறிந்திட விதைப் பரிசோதனை நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்.

மேலும், தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் பயன் படுத்துமாறு வேளாண்மைத் துறை நமது பகுதி அனைத்து விவசாயிகளிடம் அறிவுறுத்தப் படுகிறது.

கீரைகளை சாகுபடி செய்வதற்கு முன்பு விதை பரிசோதனை செய்வது அவசியம். எனவே விதையின் தரத்தை உறுதி செய்வதற்கு அருகில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- செலுத்தி விதையின் தரத்தினை அறிந்து கொள்ளலாம்.

தரமான விதைகளே நல்ல விளைச்சலுக்கு ஆதாரம். எனவே விதைகளை புற தூய்மை மற்றும் விதை முளைப்பு திறன் ஆய்வு செய்து பயிரிடும்படி திருவள்ளூர், விதைபரிசோதனை நிலையம், வேளாண் அலுவலர் P.T. ராஜேஷ் விவசாயிகளை கேட்டுக்கொள்கிறார்.



# மீன் அமிலம் செயல்முறை விளக்கம்



புதுச்சேரி, ஏப்.13

புதுச்சேரி பாகூர் பகுதியில் மீன் அமிலம் தயாரிக்கும் முறையை ஸ்ரீ மணக்குள விநாயகர் வேளாண் பள்ளி இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் சபீனா பர்வீன், சுபஹரிணி.க, சுபிக்ஷா.மு, சுஜித்ரா.கோ, சொர்ணலட்சுமி.ர, துளசி.ம, வைஷ்ணவி.செ, வினோதினி.ஏ, விருட்சிகா.மு, யஷ்வஸ்ரீ.சி, யுகபாரதி.இ.ரா. ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் விவசாயிகளுக்கு கொண்டு சேர்த்தனர்.

மீன் அமிலம் என்பது மீன் கழிவுகள் மற்றும் வெல்லம் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஒரு இயற்கை உரமாகும். இது தாவர வளர்ச்சிக்கு தேவையான நைட்ரஜன் மற்றும் ஊட்டச் சத்துகளை வழங்கி செடிகளின் ஆரோக்கியமான வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

**தயாரிக்கும் முறை :** மீன் கழிவுகளை சிறிய துண்டுகளாக நறுக்கி, அதற்கு சம அளவு வெல்லம் சேர்த்து ஒரு மூடியுள்ள பாத்திரத்தில் 20-30 நாட்கள் புளிக்க விட வேண்டும். பின்னர் கிடைக்கும் திரவத்தை வடிகட்டி, தேவையான அளவு நீரில் கரைத்து பயிர்களுக்கு தெளிக்கலாம். இது பயிர்களின் வளர்ச்சியை அதிகரித்து, விளைச்சலை உயர்த்த உதவுகிறது. மேலும் இது இயற்கை விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு சுற்றுச்சூழல் நட்பு உள்ளீடாகும்.

இந்நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் முனைவர் கா.முகமது யாசின் வழிகாட்டுதலில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பு.வ.ராவ் கெலுஸ்கர், திட்ட அலுவலர் M.செல்வகணபதி ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்றது.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# சித்திரை மாத உழவு பத்தரை மாற்று தங்கம் - உழவின் முக்கியத்துவம்



சித்திரை பிறக்க போகுகிறது. நம்முடைய நாட்டில் 70% விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வாதார செழிப்பாக இருக்க கோடை உழவு போட வேண்டியது அவசியமாகும். 12 ராசி களில் முதல் ராசியான மேத்தில் சூரியன் நுழையும் சித்திரை மாத முதல் நாளை தமிழக மக்கள், தமிழ் புத்தாண்டாக கொண்டாடுகின்றனர். அந்த நாளில் தான் பொன்னேர் பூட்டு உழவு பணியை தொடங்கி வைப்பார்கள். அதை பற்றி விரிவாக பார்ப்போம்.

**பொன்னேர் பூட்டுதல்**

சித்திரை மாத வளர் பிறை நன்னாளில் ஊரே ஒன்றுகூடி பொதுவான நிலத்தில் உழவு போட ஆரம்பிப்பார்கள். அதற்கு பிறகு தான் தங்களுடைய நிலங்களில் வருகிற வருடத்திற்கு சாகுபடிக்கு தொடக்கமாக இந்த உழவு போடுவாங்க.

**கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள்**

1) மண்வளத்தை அதிகரிக்கும் நைட்டிரஜன் நிலைப்படுத்தும் பயிர்களை பயிரிட்டால் அடுத்த சாகுபடிக்கான உரத் தேவை களை குறைக்கும் அதுமட்டுமல்லாது நிலத்தடி நீரை நிலத்தில் தக்க வைக்க உதவுகின்றது இந்த கோடை உழவு.

2) நிலத்தில் தங்கியுள்ள மண்ணுக்கு அடியில் பதுங்கியுள்ள புழு பூச்சிகள் முட்டைகள், கூண்டுபுழுக்கள் கோடை உழவால் மண்ணின் மேற்பரப்பிற்கை கொண்டு வந்து கடுமையான சூரிய வெப்பத்தால் அவை மடிந்து போகும். களை விதைகள் கூட உழவால் செயலிழந்து போகும்.

3) கோடை உழவால் நிலத்தில் ஏற்படும் மண்ணரிபு தடுக்கப்படும்.

4) தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும் – என்பது வள்ளுவரின் குறள்

அந்த காலத்துல கிராமப்புறங்களில் ஒரு பழமொழி உண்டு.

அழுது கிட்ட இருந்தாலும்கூட உழுது கிட்ட இருப்பாங்க. சித்திரை பிறந்தவுடன் உழவு போட்டிகிட்டே ஆடி வரை உழவுவார். அப்படி செய்தால் ஏழு உழவு போட்டால் எரு போட வேண்டியதில்லை. என்பது போல கால்படி மண்ணை உழுது உழுது விசம்படி யாக மாற்றுவார்கள். கோடை உழவு செய்வ தால் முன்பருவ விதைப்புக்கு ஏதுவாகிறது, கோடை உழவால் கோடி நன்மைகள் உண்டாகும் என்பதில் மாற்றம் இல்லை.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# வேளாண்மைத் துறையின் மூலம் 100% வாக்களிப்போம்! வாக்காளர் விழிப்புணர்வு பேரணி!!



சேலம், ஏப்.13

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு வருகின்ற 23 ஏப்ரல் 2026 சட்டமன்ற தேர்தலுக்கு 100% வாக்களிப்போம் என்பதை வலியுறுத்தி சேலம் வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணியில் தேர்தல் விழிப்புணர்வு பற்றிய பதாகைகள் விழிப்புணர்வு துண்டுத் தாள்கள் மற்றும் பிரசுரங்கள் பயன் படுத்தப்பட்டன. இப்பேரணியில் விவசாயிகள், வேளாண்மை துறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் இதர துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

# தமிழ்நாட்டில் கொளுத்தும் வெயில்!

# தென்மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு!!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!!!

சென்னை, ஏப்.13

தமிழ்நாட்டில் வெயில் கொளுத்தி வரும் நிலையில், தென்மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மார்ச் மாதம் தொடங்கியதில் இருந்தே கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு பரவலாக மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் சற்று குறைந்ததால் மக்கள் நிம்மதி அடைந்தனர். ஆனால் தற்போது மீண்டும் வெயில் சுட்டெரித்து வருகிறது. இந்நிலையில், தமிழகத்தில் தென்மாவட்டங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வடக்கு மத்திய பிரதேசம் முதல் தென் தமிழகம் வரை வளிமண்டல காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதனால் இன்று முதல் 18ம்தேதி வரை கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் ஆங்காங்கே லேசான மழை பெய்யக்கூடும். மற்ற மாவட்டங்களில் மழையின்றி வறண்ட வானிலையே தொடரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்தமிழக மாவட்டங்களில் அதிகபட்ச வெப்ப நிலை ஒரு சில இடங்களில் ஏப்ரல் 16ம்தேதி வரை சற்று அதிகமாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொருத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். கடலுக்கு செல்லும் மீனவர்களுக்கு எந்த வித எச்சரிக்கையும் விடப்படவில்லை. எனவே வழக்கம் போல் கடலுக்கு செல்லலாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# விதை பரிசோதனை நிலையத்தில் 179 விதை மாதிரிகள் தரம் குறைவானது என விதை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது

நாகப்பட்டினம், ஏப்.13

நாகப்பட்டினம் மாவட்ட விதை பரிசோதனை நிலையத்தில் 2025-2026 ஆண்டில் 2594 விதை மாதிரிகள் பரிசோதனை செய்ததில் 179 விதை மாதிரிகள் தரம் குறைவானது என அறிவிக்கப்பட்டுள்ளது.



நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள விதை சான்றளிப்புத் துறை, விதை ஆய்வாளர்கள், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் விதையினை பரிசோதனை செய்ய அனுப்புகின்றனர்.

விதை பரிசோதனை நிலையத்தில் விதையின் முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற ரக கலப்பு ஆகியவை பரிசோதனை செய்து முடிவுகள் அறிவிக்கப்படுகின்றது. 2025-2026 ஆண்டில் விதை சான்றளிப்புத்துறை மூலம் பெறப்பட்ட 914 விதை மாதிரிகளில் 75 விதை மாதிரிகள் தரம் குறைவானது எனவும், விதை ஆய்வாளர்கள் மூலம் பெறப்பட்ட 885 மாதிரிகளில் 74 விதை மாதிரிகள் தரம் குறைவானது எனவும், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட 795 விதை மாதிரிகளில் 30 விதை மாதிரிகள் தரம் குறைவானது என கண்டறியப்பட்டு, விதை விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. எனவே விதை பரிசோதனை செய்வது மிகவும் அவசியமாகும்.

எனவே விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து விதைப்பதன் மூலம் அதிக மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம். விதைகளை பரிசோதனை செய்ய பரிசோதனை கட்டணமாக ரூ.80/- (ரூபாய் எண்பது) மட்டும் செலுத்த வேண்டும். விதைகளை பரிசோதனை செய்ய மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், 15,காளியம்மன் கோயில் தெரு, நாகப்பட்டினம் - 611 001 என்ற முகவரிக்கு நேரிலோ/தபால் மூலமோ விதை மாதிரிகள் அனுப்பி பயன் பெறலாமென நாகப்பட்டினத்திற்கான விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதாதேவி, செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.



# போச்சம்பள்ளி சந்தையில் தேர்தலால் புளி வர்த்தகம் பாதிப்பு

கிருஷ்ணகிரி, ஏப்.13

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புளிய மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக போச்சம்பள்ளி, மத்தூர், சாமல்பட்டி, ஊத்தங்கரை, கல்லாவி, புலியூர், அரசம்பட்டி, வேலம்பட்டி, சந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் லட்சம் புளிய மரங்கள் உள்ளன. விவசாயிகள் தங்கள் விவசாய தோட்டங் களிலும், நெடுஞ்சாலைத் துறையினர் சாலையோரங்களிலும் புளிய மரங்களை பாரமரித்து வருகிறார்கள். இப்பகுதியில் மண் வளம் புளி சாகுபடிக்கு கைகொடுத்து வருகிறது.

இப்பகுதியில் விளையும் புளியில் சதைப்பற்று மிகுந்திருப்ப தால் சந்தைகளிலும் நல்ல வரவேற்பு காணப்படுகிறது. இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் புளியை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு மட்டுமின்றி கேரளம், கர்நாடகம், ஆந்திர, பாண்டிசேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் புளியை உலுக்கி எடுத்து கொட்டை, ஓடுகள், மற்றும் நார் நீக்கி சுத்தம் செய்து பதப்படுத்தி விற்பனை செய்கிறார்கள். நடப்பாண்டு புளி விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், மாவட்டத்தில் உள்ள சந்தைகளுக்கு வரத்து அதிகரித்து காணப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாக போச்சம்பள்ளி வாரச்சந்தைக்கு டன் கணக்கில் புளியை எடுத்து வந்து விற்பனை செய்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த காலங்களில் புளியின் தரத்தை பொறுத்து கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது.

நேற்று முன் தின சந்தையில் புளி விலை வெகுவாக குறைந்தது. கிலோ ரூ.30 முதல் ரூ.32 வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. கோடை வெயில் சுட்டெரித்து வருவ தால், பானகம் தயாரிப்பில் புளி பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், அதிக விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் சந்தைக்கு வந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஒரு சிலர் புளியை விற்காமல் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

இது குறித்து புளி மொத்த வியாபாரிகள் கூறுகையில், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், உரிய ஆவணங்கள் இல்லாமல் ரொக்கமாக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப்படுகிறது. ஒரு விவசாயி தனது நிலத்தில் அறுவடை செய்த விளைபொருட்களை, வியாபாரி களிடம் விற்பனை செய்தால் அதற்கான எந்த ஆவணமும் இருப்பதில்லை.

தேர்தல் பறக்கும் படை கெடுபிடி காரணமாக, போச்சம்பள்ளி சந்தையில் புளியை வாங்க வெளி மாவட்ட, மாநில வியாபாரிகள் முன் வராததால் விலை குறைந்துள்ளது. அதே நேரத்தில், கடந்த வாரத்தை காட்டிலும் புளி வரத்து அதிகரித்தது. சுமார் 40 டன் புளியை கொண்டு வந்து குவித்தனர். உரிய விலை கிடைக்கவில்லை. தேர்தல் முடிந்த பின்பு தான் புளி விலை உயரும்,' என்றனர்.

# ரூ.1.64 கோடிக்கு 113 டன் எள் ஏலம்

ஈரோடு, ஏப்.13

ஈரோடு மாவட்டம், சிவகிரி விற்பனை கூடத்தில் 113 டன் ரூ.1.64 கோடிக்கு எள் ஏலம் நடந்தது. சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் எள் ஏலம் நடந்தது.

ஏலத்திற்கு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 1519 மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், கருப்பு ரகம் குறைந்தபட்சமாக கிலோ ரூ.114.62க்கும், அதிகபட்சமாக ரூ.172.90க்கும், சராசரியாக ரூ.147க்கும், சிவப்பு ரகம் கிலோ குறைந்தபட்சமாக ரூ.95.62க்கும், அதிக பட்சமாக ரூ.143க்கும், சராசரியாக ரூ.132க்கும், வெள்ளை ரகம் குறைந்தபட்சமாக ரூ.130க்கும், அதிகபட்சமாக ரூ.138.00க் கும், சராசரியாக ரூ.134.90க்கு ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 752 கிலோ (113 டன்) எள் ரூ.1 கோடியே 64 லட்சத்து 98 ஆயிரத்து 885 ரூபாய்க்கு விற்பனையானது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இயற்கையின் படைப்பில் பூஞ்சைகளின் அற்புத ராஜ்ஜியம்




பூஞ்சை என்பது ஈரப்பதமான சூழல்களில் வளரும் நுண்ணுயிர். அதுகிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் வித்துகள் மூலம் பரவுகிறது.

பூஞ்சைகளைப் பற்றிய பாடப்பிரிவு மைக்காலஜி எனப்படும். பூஞ்சைகள் தாலோஃபைட்டா பிரிவைச் சார்ந்தவை. இதன் தாவர உடலமானது வேர், தண்டு, இலை என பிரிக்கப்பட்டிருப்பதில்லை. பூஞ்சைகளின் உடலமானது ஹைபாக்கள் எனும் பூஞ்சை இழைகளால் ஆனது. ஒன்றிற்கும் மேற்பட்ட பூஞ்சை இழைகள் இணைந்து மைசீலியம் எனப்படும் இழைப் பின்னலை உருவாக்குகின்றன. பூஞ்சைகள் பல செல்களால் ஆன யூகேரியாட் செல் அமைப்பைக் கொண்டவை. ஈஸ்ட் போன்ற சில வகைப் பூஞ்சைகள் ஒரு செல்லால் ஆன யூகேரியாட் செல் அமைப்பைக் கொண்டவை. பூஞ்சையின் செல் சுவரானது கைட்டின் என்ற வேதிப் பொருளால் ஆனது. பூஞ்சைகளில் பச்சையம் கிடையாது. எனவே, இவை பிற சார்பு உயிரிகளாக உள்ளன. பிற சார்பு உயிரிகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, ஒட்டுண்ணிகள், மட்குண்ணிகள் மற்றும் இணைப்புயிரிகள் ஆகும். ஒரு சில பூஞ்சைகள் மட்குண்ணிகளாக வாழ்கின்றன. அவை இறந்த மற்றும் அழுகிய பொருள்களின் மீது வாழ்ந்து அவற்றிலிருந்து உணவைப் பெறுகின்றன.

லைக்கன்கள் வகை பூஞ்சைகள் பாசிகளுடன் சேர்ந்து ஒன்றுக் கொன்று பயன் பெறக் கூடிய வகையில் இணைப்புயிரிகளாக வளர்கின்றன. சில பூஞ்சைகள் உயர் தாவரங்களின் பூஞ்சை வேர்களுடன் இணைந்து கூட்டுயிரிகளாக வளர்கின்றன.

**பூஞ்சைகள் பல்வேறு வகைகளில் நமக்குப் பயன்படுகின்றன.**

இயற்கையை சுத்தப்படுத்தும் அற்புதமான படைப்பான பூஞ்சைகளின் துணையின்றி, பூமியை பேணிக்காக்க முடியாது. மறுசுழற்சி செய்து மண்ணின் வளத்தைப் பெருக்குவதால், விவசாயத்தின் வளர்ச்சிக்கும் பூஞ்சைகள் மறைமுகமாக உதவி புரிகின்றன. பூஞ்சை இனம் மட்டும் இல்லையென்றால் பூமியில் பல அடி உயரத்திற்கு கழிவுகள் நிரம்பியிருக்கும். குப்பைகள், வாடிய தாவர பாகங்கள், இறந்த மிருகங்கள் போன்றவை பூஞ்சைகளின் தாக்கத்தால் மறு சுழற்சி பெற்று வளமான மண்ணாக மாறி விடும். நீர் நிலைகளில் வாழும் பூஞ்சைகள், அங்கு சேரும் குப்பைகள், கழிவு, எண்ணெய் போன்றவற்றை நொதித்து, நீர் நிலையை மற்ற உயிரினங்கள் வாழத் தகுதியுடையதாய் மாற்றும். இந்த வகையில் அனைத்து உயிரினங்களும் பூஞ்சைகளுக்கு கடன்பட்டிருக்கின்றன. எனவே, பூஞ்சைகளை 'பூமியின் சுற்றுச்சூழலின் முதுகெலும்பு' என்று கூறலாம்.



● பூஞ்சைகள் சுவை மிகுந்த, ஊட்டம் நிறைந்த உணவான காளான்களைத் தருகின்றன.

● பால் சார்ந்த தொழிற்சாலைகள் ஒரு செல் பூஞ்சையான ஈஸ்ட்டை சார்ந்துள்ளன. பிரெட், கேக் ஆகிய உணவுத் தயாரிப்பில் ஈஸ்ட் பயன்படுகிறது.

● மது பானங்கள், அமிலங்கள், சாஸ் வகைகள், சீஸ் ஆகிய தயாரிப்புகளிலும் பூஞ்சைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

● சில பூஞ்சைகள், பெனிசிலின் போன்ற உயிர்காக்கும் மருந்துகள் தயாரிப்பில் உதவுகின்றன.

● ஜிப்பெரெல்லாஃபுயுஜிகுரை என்ற பூஞ்சை உற்பத்தி செய்யும் ஜிப்ரெல்லின் என்ற தாவர வளர்ச்சி சீராக்கிப் பொருள்

தாவரங்களுக்கு வளர்ச்சி ஊக்கியாகப் பயன்படுத்தப்படுகிறது.

● மைக்கோரைஸா பூஞ்சை பல்வேறு வகையான வேலைகளை செய்கின்றது. பயிர்களின் வேரோடு கூட்டு வாழ்வு கொண்டுள்ள வாஸ்குலார் ஆர்பஸ்குலார் மைக்கோரைசா பூஞ்சையின் விரிவான வலைப் பின்னல் அமைப்பு பயிர்களின் சத்துக்களை வேர்கள் எடுத்துக் கொள்ள வைக்கும் முக்கிய பணி மற்றும் தண்ணீர் சேமிப்பிலும் உதவுகிறது.

● பூஞ்சைவேரிகளை உருவாக்கும் ரைசோக்டோனியா, ஃபாலஸ், ஸ்கிளிரோடெர்மா போன்ற பூஞ்சைகள், தாவரங்கள் நீர், கனிமப் பொருட்களை உறிஞ்ச உதவுகின்றன.

அதிகரித்து வரும் மக்கள் தொகை அழுத்தம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றால், விவசாய உற்பத்தியில் பயிர்ப்பாதுகாப்பு தொடர்பான குறிப்பிடத்தக்க சவால்களை உலகம் எதிர் கொண்டு வருகிறது. இந்தச்சூழலில், உயிரியல் பாதுகாப்பு முறைகள், நிலையான விவசாயத்திற்கும் சூழல் மண்டல மேலாண்மைக்கும் கணிசமான ஆற்றலை வழங்கு கின்றன. மண்ணில் உள்ள நன்மை செய்யும் பூஞ்சானங்கள் உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களாக செயல்பட்டு மண்ணில் உள்ள தீமை செய்யும் பூஞ்சானங்களை அழிக்கிறது.

மண்ணில் பரவும் நோய்க் கிருமிகளுக்கு டிரைகோடெர்மா இனங்கள், பூச்சிக் கட்டுப்பாட்டிற்கு பியூவேரியா பாசியானா மற்றும் நூற்புழு மேலாண்மைக்கு பர்புரியோசிலியம் லிலா சினம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இந்த உயிரியல் காரணிகள் இரசாயன பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுகின்றன.

**முக்கிய பூஞ்சை உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளும் அவற்றின் பயன்களும் :**

● ஃபுசாரியம், ரைசோக்டோனியா மற்றும் பைத்தியம் போன்ற மண்ணில் பரவும் நோய்க் கிருமிகளுக்கு எதிராக உயிரிப் பூஞ்சைக் கொல்லிகளாக டிரைகோடெர்மா இனங்களான டிரைகோடெர்மா ஹார்சியானம், டிரைகோடெர்மா விரிடே, டிரைகோடெர்மா வைரன்ஸ் ஆகியவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

● பியுவேரியாபேசியானா, மெட்டாரைசியம் அனைசோபிளியா போன்றவை வேளாண்மை பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழிக்க உதவுகின்றன.



● அசுவினி, வெள்ளை ஈக்கள் மற்றும் வண்டுகள் உள்ளிட்ட பல்வேறு பூச்சிகளைக் கட்டுப்படுத்த பியூவேரிய–ாபாசியானா ஒரு பூச்சி நோய்க் காரகப் பூஞ்சையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

● வேர்புழுக்கள், வண்டுகள், வெட்டுக் கிளிகள் மற்றும் புல் வெட்டுக்கிளி பூச்சிகளைக் கட்டுப்படுத்த மெட்டாரிசியம் அனிசோப்லியே ஒரு திறமையான பூச்சி நோய்க் காரகப் பூஞ்சையாகப் பயன் படுத்தப்படுகின்றன.

● பர்புரியோசிலியம் லிலாசினம் தாவர ஒட்டுண்ணி நூற் புழுக்களை, குறிப்பாக வேர் முடிச்சு மற்றும் உருளைக்கிழங்கு நீர்க்கட்டி நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுகிறது.

**பூஞ்சைகள் பல்வேறு வகைகளில் தீமையும் செய்கின்றன.**

பூஞ்சைகளில் தீமையும் உண்டு. தீய பூஞ்சைகள் உணவைப் பாழாக்குகின்றன. மனிதர்களிலும், தாவரங்களிலும் நோய் களை உண்டாக்குகின்றன. சில காளான்கள் மனிதனையே கொல்லக்கூடிய விம் கொண்டவை.

தகவல் தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர், Email : agri-ari@gmail.com. ph : 82480 80922.***



# கோடை வெயிலின் தாக்கம் அதிகரிப்பால் நுங்கு, மண்பானை விற்பனை தீவிரம்

அரியலூர், ஏப்.13

கோடை வெயிலை முன்னிட்டு குளிர்ந்த நீர் பருகுவதற்காக மண்பானை விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. வெயிலின் தாக்கம் மற்றும் அனல் காற்றால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.



பொதுவாக கோடைகாலம் வந்தாலே மக்கள் குளிர்ச்சியான உணவுகளை விரும்பி வாங்கி சாப்பிடுவது வழக்கம். அதன்படி திருப்பட்டினம், திருநள்ளாறு உள்ளிட்ட பல பகுதிகளில் ஆயிரக் கணக்கான பனை மரங்களை விவசாயிகள் சாலை ஓரங்களிலும், சாகுபடி நில பகுதியின் கரைகளிலும், சிற்றோடை கரைகளிலும் சாகுபடி செய்துள்ளனர்.

ஆண்டுக்கு ஒரு முறை பலன் தரும் பனைமரத்தில் பதநீர் பனை நுங்கு சீசன் ஏப்ரல் மாதம் தொடங்கி மே மாதம் முடிய இருக்கும். ஒரு நுங்கு கண் ரூ.10க்கு விற்கப்படுகிறது. தற்போது, வெயில் கொளுத்தி எடுக்கும் நிலையில் ஆங்காங்கே பனை நுங்கு விற்பனை சூடு பிடித்து வருகிறது. இதே போல் இளநீர், தர்பூசணி, பழச்சாறு விற்பனைகளும் சூடுபிடித்துள்ளது. மக்கள் தாகத்தை தணிக்க கூழ்கடைகள், குளிர்பான கடைகளில் படையெடுக்க தொடங்கியுள்ளனர்.

# வாழைத்தார் விற்பனை அமோகம்

கோயம்புத்தூர், ஏப்.13

பொள்ளாச்சி மார்க்கெட்டில் நேற்று முன் தினம், வாழைத்தார் அதிக விலைக்கு விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், வாரத்தில் புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாழைத்தார் விற்பனை செய்யப்படுகிறது. இங்கு சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தும் தூத்துக்குடி, திருச்சி உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்தும், வாழைத்தார் கொண்டு வரப்பட்டு, அவை தரத்திற்கேற்றார்போல் விற்பனை செய்யப்படு கிறது. ஆனால், கடந்த சில மாதமாக வெயிலின் தாக்கத்தால் சுற்று வட்டார கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழைகள் வாடி வதங்கியதுடன் அதன் அறுவடை பணி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், சுற்றுவட்டார கிராம பகுதியிலிருந்து வழைத்தார் வரத்து கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக குறைவாக காணப்பட்டது.

இதில் நேற்று முன்தினம் நடந்த சிறப்பு சந்தை நாளின்போது, வெளியூர்களில் இருந்து வாழைத்தார் வரத்து குறைவாக இருந்தாலும், சில வாரத்திற்கு பிறகு சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து வாழைத்தார் வரத்து இருந்தது. மேலும், இன்று சித்திரை மாத பிறப்பு என்பதால், அனைத்து ரக வாழைத்தார்களும், கடந்த வாரத்தைவிட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் படி செவ்வாழை தார் ஒரு கிலோ ரூ.60க்கும், பூவந்தார் ரூ.40க்கும், கற்பூரவள்ளி ரூ.40க்கும், மோரீஸ் ரூ.38க்கும், கேரள ரஸ்தாளி ரூ.45க்கும், நேந்திரன் ரூ.45க்கும் விற்பனை செய்யப்பட்டதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**